# நோர்வேயில் குடும்பமீழிணைவிற்கு விண்ணப்பிப்போரிற்கான தகவல்

**புதிய நாடடொன்றிற்கு இடம்பெயர்ந்து செல்வது புதிய சந்தர்ப்பங்களையும், எதிர்பாராத சவாற்களையும் தரும். நல்லதொரு வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு அந் நாட்டைப்பற்றிய விபரங்களை அறிந்து கொள்வது முக்கியமாகும். நோர்வேயிற்கு வரும் சிலர் துரஷ்டவசமாகப் பிரச்சனைகளுக்கு உள்ளாவதுண்டு. அப்படியான சூழ்நிலை களை எப்படிச் சமாளிப்பது எனத் தெரிந்திருப்பது பிரயோசனமாக இருக்கும். இங்கு வழங்கப்படும் தகவல்கள் நோர்வேயிற்கு இடம்பெயர்ந்து வரும் சிலர் முன்னோக்கக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தமானதாகும்.**

## சட்டம்

*நோர்வே சட்டம் நோர்வேயில் வசிக்கும் அனைவருக்கும் செல்லுபடியாகும்.*
நோர்வே சட்டத்திற்கும், சமயச் சட்டத்திற்கும் இடையில் முரண்பாடுகள் இருப்பின் நோர்வே சட்டம்தான் பின்பற்றப்பட வேண்டும். நோர்வேய சமுதாயத்தில் ஆணும், பெண்ணும் சரிசம மானவர்கள் என்பது அடிப்படைக் கொள்கை, அத்தோடு இது நோர்வே சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணுக்கும், பெண்ணுக்கும் கல்வி, வேலை, கலாச்சார மற்றும் தொழில் அபிவிருத்தி போன்றவற்றில் சம உரிமையுண்டு. சமயம், இனம் மற்றும் ஆண், பெண் போன்றவை காரணமாகப் பாகுபாடு காட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.

## திருமணம்

பலதாரமணம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒரே சமயத்தில் பலரைத் திருமணம் செய்வது சட்ட விரோதமாகும். பலதார மணம் செய்பவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்படலாம். வெளிநாட்டில் பலதாரமணம் செய்திருந்தால் அவர்களில் ஒருவரை மட்டுமே குடும்ப மீழ் இணைவின் அடிப்படையில் நோர்வேயிற்கு அழைக்கலாம். நோர்வே சட்டப்படி தம்பதியினர் தம்மையும், தமது பிள்ளைகளையும் பராமரிக்கக் கடமைப் பட்டுள்ளனர். குடும்பத்தின் பொருளாதார நிலையைக் கணிப்பிட்டுக் கொள்வதற்குத் தம்பதியினர் தமது வரவு செலவு விபரங்களை ஒருவருக்கொருவர் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

## பலாத்காரத் திருமணம்

*சுய விருப்பத்துடன் செய்யப்படும் திருமணம் மட்டுமே நோர்வேயில் ஏற்றுக்கொள்ளப்படும்.*
பலாத்காரத் திருமணம் தண்டனைக்குரிய குற்றமாகும். பெற்றோர் அல்லது ஏனையோர் 18 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்குச் செய்துவைக்கும் திருமண ஒப்பந்தம் நோர்வேயில் செல்லுபடியாகாது. பலாத்காரமாக அல்லது வற்புறுத்தி இன்னொருவரைத் திருமணம் செய்விப்பவருக்குச் சிறைத்தண்டனை வழங்கப்படலாம். பலாத்காரமாகச் செய்யப்பட்ட திருமணமாக இருந்தால் அது குடும்ப மீழ் இணைவுக்கான காரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## விவாகரத்து

*ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகரத்து விடயத்தில் சரிசமமான உரிமையுண்டு.*
நோர்வே விவாகரத்துச் சட்டங்களின்படி ஆண், பெண், இனம் அல்லது சமயம் போன்ற பாகு பாடுகள் இல்லாமல் விவாகரத்துப் பெறவும் விவாகரத்திற்குப் பின் பாகுபாடின்றி பொருளாதாரப் பங்கீடு பெறவும் உரிமையுண்டு. நோர்வேயில் வழங்கப்படும் விவாகரத்து மற்ற நாடுகளில் எவ்விதம் அங்கீகரிக்கப்படுகின்றது என்பது அந்நாட்டுத் தேசியச் சட்டத்தைப் பொருத்ததாகும். விவாகரத்திற்குப் பின் பிள்ளைகளின் அன்றாடப் பராமரிப்பு மற்றும் பொறுப்பு சம்பந்தமான விதிமுறைகள் இரு தம்பதியினருக்கும் சமமானதாகும்.

## பிள்ளைகள்

*நோர்வேயில் பிள்ளைகளுக்கெனப் பிரத்தியேக உரிமைகளுண்டு.*
நோர்வே சட்டத்தின்படி 18 வயதிற்குறப்பட்ட அனைவரும் பிள்ளைகளாகும். எல்லாப் பிள்ளைகளுக்கும் சுயமான சட்ட உரிமைகளும், மற்றும் பெற்றோரிடமிருந்து தேவையான பராமரிப்பிற்கும் உரிமையுண்டு. பிள்ளைகள் ஆறு வயதை அடைந்ததிலிருந்து பத்தாவது பாடசாலை வருடத்தை முடிக்கும்வரை அவர்களுக்குப் பாடசாலை செல்லும் உரிமையும், கடமையுமுண்டு. பிள்ளைகள் பாடசாலை செல்லக்கூடிய வழிவகைகளை அமைத்துக்கொடுப்பது பெற்றோரின் கடமை யாகும். ஆரோக்கியம் அல்லது முன்னேற்றம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையில் பிள்ளைகள் இருந்தால் அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள். பிள்ளைகளுக்கு உடல்ரீதியான தண்டனை வழங்குவது சட்டத்திற்கு விரோதமாகும். உதாரணமாகப் பிள்ளைகளை அடிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

## வன்முறை

*வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட அனைவரும் நோர்வே அரசாங்கத்திடமிருந்து உதவிபெற உரிமையுண்டு. இது குடும்ப உறுப்பினர்களால் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கும் செல்லுபடியாகும்.*

குடும்பத்திற்குள் இடம்பெறும் வன்முறை நோர்வேயில் தண்டனைக்குரிய குற்றமானதுடன், அது சம்பந்தமாகப் பொலிசார் முக்கிய கவனமெடுத்து விசாரணையும், நடவடிக்கையும் மேற்கொள்வார்கள். உடல் மற்றும் மனரீதியான வன்முறைமட்டுமன்றி மிரட்டல், பலாத்காரம் மற்றும் பராமரிப்பு அலட்சியம் போன்றவையும் நோர்வேயில் வன்முறையாகக் கணிக்கப்படும்.
பிள்ளை அல்லது மனைவியை/கணவனை வன்முறைக்கு உள்ளாக்குபவருக்கு 8 வருடங்கள்வரை சிறைத்தண்டனை விதிக்கப் படலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு இழைக்கப்படும் வன்முறைக்கு ஏனைய வன்முறைகளைவிடக் கடுமையான தண்டணை வழங்கப்படலாம்.

கணவன் அல்லது சேர்ந்து வாழ்வோர் காரணமாகக் குடும்ப மீழ் இணைவு அடிப்படையில் நோர்வேயில் வதிவிட அனுமதி கிடைத்த பெண், மன அல்லது உடல்ரீதியான வன்முறைக்கு உள்ளாக்கப் பட்டிருந்தால், தனிப்பட்ட வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம். கணவனுடன் சேர்ந்து வாழாவிட்டாலும் இது செல்லுபடியாகும்.

குடும்ப மீழ் இணைவு காரணமாக வந்து மூன்று வருடங்களுக்கு மேல் நோர்வேயில் வாழ்ந்தவர்கள் சாதாரணமாக நிரந்தர வதிவிட அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

வன்செயல் காரணமாக அவசர உதவி தேவைப்பட்டால் தொலைபேசி இல. 112 ல் பொலிசாரைத் தொடர்பு கொள்ளவும். ஏதாவது வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் அவசர உதவி இல்லத்தைத் (Krisesenter) தொடர்பு கொள்ளலாம். அவசர உதவி இல்லம் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பும் உதவியும் வழங்குகிறது.

---

## பிரயோசனமான தகவல்கள்

### வீசா/நுளைவு அனுமதி

நோர்வே சென்கன் கூட்டுறவில் உள்ளது. நுளைவு அனுமதிக் காலக்கேடு முடிவுற்ற பின் சென்கன்பகுதி நாடுகளைவிட்டு வெளியேற வேண்டும் எனும் நிர்பந்தத்தில் சென்கன் நாடுகளுக்கான விசா வழங்கப்படுகிறது. விசாவின் காலக்கேடு முடிவடைந்தபின் நீங்கள் தொடர்ந்து நோர்வேயில் இருந்தால் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவீர்கள். அதனால் நீங்கள் எதிர்காலத்தில் நுளைவு அனுமதி அல்லது வதிவிட அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது பிரச்சனைக்கு உள்ளாகலாம்.

நுளைவு அனுமதியைக் கொண்டு நீங்கள் நோர்வேயில் வேலைபெற முடியாது. நோர்வே தூதுவராலயங்களில் இது சம்பந்தமான மேலும் விபரங்களைப் பெறலாம்.

### வேலை, வதிவிட அனுமதிகள்

நீங்கள் வேலை, வதிவிட அனுமதிகோரி நோர்வே தூதுவராலயங்களில் விண்ணப் பிக்கலாம். க.பொ.த. படிப்பின் உங்களிடம் மூன்று வருடத் தொழிற்படிப்பு இருந்தால் நீங்கள் நிபுணர் எனும் அடிப்படையில் வேலை அனுமதிகோரி விண்ணப்பிக்கலாம்.

நோர்வேயில் வேலை அல்லது வதிவிட அனுமதி வழமையாக ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்பட வேண்டும். மூன்று வருடங்களின்பின் நிரந்தர வதிவிட அனுமதிகோரி விண்ணப்பிக்கலாம்.

நிரந்தர வதிவிட அனுமதிக்கு முடிவுக் காலக்கேடு இல்லாததால் அதைப் புதுப் பிக்கவேண்டிய அவசியம் இல்லை. நோர்வே தூதுவராலயங்களில் மேலும் விரங்களைப் பெறலாம். அத்துடன் www.udi.no இணையத்தலத்தைப் பார்க்கவும்.

### நோர்வேயில்

பல நகரசபைகளில் அகதிவழிகாட்டிகள் உள்ளார்கள். அகதிவழிகாட்டி என்பவர் குடிவந்தோரிற்கும், அகதிகளுக்கும் தேவையான நாளாந்த விடயங்களிற்கான அறிவுரைகளையும், வழிகாட்டலையும் தொண்டுரீதியில் வழங்கி உதவிசெய்பவர்.
அகதிவழிகாட்டிகளினூடாக நீங்கள் உள்ளூர் மற்றும் நோர்வே சமுதாயம் பற்றி நன்கு அறிந்துகொள்ளவும், நோர்வே மொழியை நடைமுறையில் கற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இத்திட்டம் இலவசமாக வழங்கப் படுகிறது. ஆகதி வழிகாட்டிகள் சம்பந்தமான விபரங்களைப் பெற நகரசபையைத் தொடர்பு கொள்ளவும்.

அனேகமான நகரசபைகள் நோர்வே மொழி கற்பதற்கான வசதிகளை குடிவந்தோரிற்கு வழங்குகிறது. மேலதிக விபரங்கள் பெற நகரசபையுடன் தொடர்பு கொள்ளவும்.

### தொடர்புத்தலங்கள்

- அகதிகள் சுயஉதவி www.seif.no
- ஒஸ்லோ செஞ்சிலுவைச் சங்கம் பலாத்காரத் திருமணம் சம்பந்தமான உதவி, அறிவுரைகளை வழங்குகிறது. தொலைபேசி 815 55201 (நேரம் 9.00 முதல் 18.00 வரை)

- நோர்வேயிலுள்ள அவசர உதவி இல்லங்களின் முகவரி மற்றும் தொலைபேசி விபரங்களை www.krisesenter.com யில் பெறலாம்.
- Aetat - வேலைதேட உதவிபெற. நீங்கள் இருக்கும் இடத்திலுள்ள Aetat தொடர்புகொள்ளவும், அல்லது www.aetat.no
- வெளிநாட்டவர் விடய ஆணையகம் (UDI): தொலைபேசி: 23 35 15 00 www.udi.no
- பொலிஸ்: 02800
- அவசர உதவிதேவையான சூழ்நிலைகளில் தொலைபேசி இலக்கங்கள்: தீயணைப்பு 110, பொலிஸ் 112, அம்புலனஸ் (முதலுதவி) 113